### படாளத்தில் போலீஸ் அவுட் போஸ்ட்.

*** 531 வினு.—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தில் படாளத்தில் போலீஸ் O.P. திறக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :**

இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** படாளம் ஒரு தொழிற்சாலைப் பகுதியாகையால் ஆலை நிர்வாகத்தினர் இனமாக ஒரு கட்டிடம் கட்டித் தர முன் வந்தால் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** அப்படிக் கொடுத்த பிறகு வேண்டுமானல் அதைப்பற்றி யோசிக்கலாம்.

### Sub-Court for Kancheepuram.

* 544 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU V. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether a sub-court has been opened in Kancheepuram, Chingleput District; and

(b) the reason therefor ?

**மாண்புமிகு. திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) தலைமைத் துணை நீதிமன்றம், கூடுதல் துணை நீதிமன்றம் என்று செங்கற்பட்டில் இரண்டு துணை நீதிமன்றங்கள் இருந்தன. செங்கற்பட்டு, பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருத்தணி முன்சீப்களடங்கிய செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் அவற்றிற்கு அதிகாரவரம்பு உண்டு. இந்த நீதிமன்றங்களில் பல வழக்குகள் முடிவு பெறுமலேயே இருந்தன. பணி முழுவதையும் இரண்டு துணை நீதிபதிகளால் கவனிக்க இயலவில்லை, அதன் விளைவாக, கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை பெரிதும் உணரப்பட்டது. வழக்காடும் பொதுமக்களின் நலனுக்காகவும், வளர்ந்துவரும் காஞ்சிபுரம் நகரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கு கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க ஒப்பளிப்பு வழங்குவதற்குப் பதிலாக, காஞ்சிபுரம், திருத்தணி, திருவள்ளூர் முன்சீப்கள் மீது அதிகார வரம்புள்ள வகையில் காஞ்சிபுரம் நகரில் துணை நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1969 அக்டோபர் திங்களில் அரசு முடிவு செய்தது. காஞ்சிபுரத்திலுள்ள துணை நீதிமன்றம் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.